1989 ஏப்ரல் 4]

திரு. எஸ். டேனியல் ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்களினுடைய கட்டடங்களைக் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதியிலிருந்து 50 சதவிகிதமும், அரசினுடைய மானியமாக 50 சதவிகிதமும் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். நிதியில்லாத ஊராட்சி ஒன்றியங்கள் 50 சதவிகிதம் கொடுக்க முடியாத காரணத்தால், கால்நடை மருந்தகங்களின் கட்டடங்களைக் கட்ட முழு மானியத்தையும் அரசே வழங்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவ்வாறு ஒன்றியப் பொது நிதியில் நிதி இல்லாதிருந்தால், அரசு அதனைப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. வெங்கடாசலம் : மாண்புமிகு தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்களுக்கென்று ஆண்டு ஒன்றுக்கு 10,000 ரூபாய் அளவிற்கு மருந்துகள்தான் வழங்கப்படுகின்றன என்று கால்நடை மருத்துவர்கள் குறை கூறுகிறார்கள். எனவே, மேலும் அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, தேவையான மருந்துகளைக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போல, கால்நடை மருந்தகங்களுக்கு 10,000 ரூபாய் மருந்துகள்தான் வழங்கப்படுகிறதென்பது தவறான கருத்தாகும். ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு 20,000 ரூபாய் மருந்துகள் வழங்கப்படுகின்றன. தற்போதைய நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டும், சிகிச்சைக்கு வருகிற கால்நடை எண்ணிக்கையைப் பொறுத்தும், நிர்ணயிக்கப்படுகிற ஒன்று இது. இதை அதிகப்படுத்தும் குறிப்பை பின்னால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்மோட்டார்களின் சக்தியை அதிகப்படுத்த மின் பயனீட்டாளர் தானாகவே முன்வந்து வெளியிடும் திட்டம்.

குறுகிய கால வினா எண் (1) * வினா எண். 2008—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விவசாயிகள் பயன்படுத்தும் மின் மோட்டார்களின் சக்தியை அதிகப்படுத்த மின் பயனீட்டாளர் தானாகவே முன்வந்து வெளியிடும் திட்டம் (Voluntary Disclosure Scheme) ஒன்றை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, விவசாயிகள் பயன்படுத்தும் மின் மோட்டார்களின் சக்தியை அதிகப்படுத்த மின்பயனீட்டாளர் தானாகவே முன்வந்து வெளியிடும் திட்டம் (Voluntary Disclosure Scheme) கொண்டு வரும் எண்ணம் இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாட்டில் வறட்சி தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. நேற்றையதினம்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போர்க்கால நடவடிக்கைகள் போல் நடவடிக்கை எடுத்து இந்த வறட்சி நிலைமை சமாளிக்கப்படுமென்று கூறினார்கள். நிலத்தடி நீர் கீழே போய்க் கொண்டிடிருப்பதால், தங்களுடைய இறைவைப் பாசனத்தை நம்பியிருக்கும் விவசாயிகள், ஹார்ஸ்பவரை அதிகப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அனுமதியில்லாமல் ஏராளமான விவசாயிகள் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, பல்வேறு மாவட்டங்களில் இப்படிச் செய்திருக்கிறார்கள். கடந்த காலத்திலே மின்சார வாரியம் இப்படிப்பட்ட ஸ்கீமை, இதை அடிப்படையாக வைத்துகொண்டு வந்திருக்கிறது. 4—1—1989-ல் வெளியான போர்டு புரோசீடிங்ஸ் எண். 5. அதே மாதிரி 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 9-ஆம் தேதி இப்படிப்பட்ட வாலண்டரி டிஸ்க்ளோஷர் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதன் போர்டு புரோசீடிங்ஸ் எண். 23. எனவே, விவசாயிகளின் நலனைக் கருதி, இந்தத் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வருவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டிலும், 1984-ஆம் ஆண்டிலும் இதுபோல அரசாங்கம் அறிவித்தது. பல இடங்களிலே முறைகேடாக அவர்களாகவே மின்சக்தியை அதிகப்படுத்தி எடுத்துக் கொண்ட காரணத்தால் ஆங்காங்கே இருக்கிற டிரான்ஸ்பார்மர்கள் மற்றும் உபகரணங்கள் எல்லாம் வீணாகி விட்டன. அதைப் போலவே ஆங்காங்கே இருப்பவர்கள் அதிகமான சக்தியை எடுத்துக் கொள்வதன் காரணமாக மின் அழுத்தக் குறைவும் ஏற்பட்டு, விவசாயிகளின் பம்புசெட்டுகளும் பழுதுபட்டன. எனவே இதைப்போல் அரசாங்கம் ஒவ்வொரு வருஷமும் 'வாலண்டரி டிஸ்குளோஷர்' ஸ்கீம் என்று அறிவித்தால் மின்வாரியத்திற்குத் தெரியாமலேயே அதிக மின்சக்தியை எடுத்துக் கொள்கிற விவசாயிகளை அரசே ஊக்கப்படுத்துவதாக அமையும் என்பதால், தற்போது இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் உறுப்பினரின் எண்ணப்படி முதலமைச்சரைக் கலந்து பேசி இதுபற்றி அறிவிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவேகூட இப்படித்தான் சொல்லப்பட்டது. அன்றைக்கிருந்த நிலைமை வேறு. இன்றைக்கு மிகக் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. ,அன்-ஆத்தரைஸ்டு

1989 ஏப்ரல் 4]

அடிஷனல் லோடை ரெகுலரைஸ்' செய்வதற்குத்தான் அந்தக் காலத்திலும் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனாலும் இன்றைக்குக் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் இதை உடனடியாகக் கொண்டு வந்தால், மின்வாரியத்திற்கும் இதன் காரணமாக அதிகமான லாபம் கிடைக்கும். 'அன்-கலெக்டட் ரெவின்யூ' என்ற வகையில் வசூலிக்க முடியாமல் இருக்கிற—யாருக்கும் தெரியாமல் இது செய்யப்படுவதால்—தொகையை வசூலிக்க வாரியத்திற்கு வாய்ப்பு கிடைக்கும். இதன் காரணமாக மின்சார டிரான்ஸ்பார்மர்கள் பழுதுபடுவதாகக்கூட சொன்னார்கள். அது போன்ற நிலைமை இனி ஏற்படாமல் செய்ய முடியும். எனவே இன்றைக்கிருக்கிற பிரத்தியேகச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, உடனடியாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, அதுபற்றி பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

திரு. என். கணபதி: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக் காலம் இது. ஒரு பட்டாவுக்கு ஒரு சர்வீஸ் கனெக்ஷன் என்று கொடுக்கப்பட்டுள்ளது. வறட்சி காரணமாக குறிப்பிட்ட கிணற்றில் தண்ணீர் இல்லாததால் அடுத்த கிணற்றின் பம்ப்செட்டைப் பயன்படுத்தி நீரை இறைத்தால், " நீங்கள் பாயின்ட் ஆப் சப்ளையை மாற்றிவிட்டீர்கள் " என்று சொல்லி நடவடிக்கை எடுத்து, மின் சப்ளையைத் துண்டித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வறட்சிக் காலங்களில் ஒரு பட்டா நிலத்தில் வேறு ஒரு கிணற்றின் பம்ப் செட்டைப் பயன்படுத்த அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பல மனுக்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அதைப்பற்றி அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து அறிவிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மின் இணைப்பு துண்டிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்க ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடும் வறட்சி நிலை தமிழகத்தில் நிலவுவதைக் கருத்திற்கொண்டு, மிகக் சிறிய விவசாயிகளுக்காவது மின்கட்டணத்தில் சலுகை தர அரசு நல்ல முடிவு ஏதேனும் எடுக்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே இதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி எழுப்புவாரானால், அதற்குத் தகுந்த பதில் அளிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே கடந்த காலத்தில் மின் கட்டணம்செலுத்தப்படாமல் பாக்கிகள் பல ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் தெரிகிறது. அந்த பாக்கிகளைக் கட்டாததன் காரணமாக விதிக்கப்பட்ட அபராத வட்டியை முதலமைச்சர் அவர்கள் நீக்கிவிட்டதாகத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால்கூட முழுத் தொகையையும் உடனடியாகக் கட்ட வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதால் கட்ட முடியாத நிலை இருக்கிறது. எனவே, அபராத வட்டியைத் தள்ளிவிட்டு, அந்த பாக்கித் தொகையைக்கூட தவணையில் கட்ட அனுமதிக்கப்படுமா ? பல இடங்களில் மின் சப்ளை துண்டிக்கப்படுவதை நிறுத்தி, பாக்கித் தொகையைத் தவணை முறையில் கட்ட அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். அண்ணாநம்பி : தலைவரவர்களே, அன்று எம். ஜி. ஆர். அவர்களுடைய காலத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்டதால் ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்று குறைந்த கட்டணம் அறிவித்தார்கள். இன்றைக்கு விவசாயிகள் கடுமையான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந் நிலையில் ஓராண்டிற்காகிலும் இலவச மின்சாரம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) செய்தித் துறை துணை இயக்குநர் ஒருவர் அரசு அலுவலர் ஒழுங்குமுறை விதிகளை மீறிச் செயல்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : ஒரு சிறிய இடையீடு. என்னிடத்தில் இசைவு பெற்றுச் சில செய்திகளைப் பேச வேண்டுமென்று மூன்று, நான்கு பேர் இசைவு பெற்றிருக்கிறார்கள். முதலில், திரு. பி.எச். பாண்டியன்.